Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk



தமிழ் Mirror


www.tamilmirror.lk

MONDAY, MAY 01, 2023

திங்கட்கிழமை மே 01, 2023

ஒளி: 08 கதிர்: 260 பக்கம்: 07

நகரப்பதிப்பு★ FREE



# 137 ஆவது சர்வதேச தொழிலாளர் தினம்

## தலைவர்கள் வாழ்த்து

137 ஆவது சர்வதேச தொழிலாளர் தினம் (மே.1) இன்று உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஏனைய கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.



இலங்கையை பொறுத்தவரையில், அரசியல் கட்சிகள் தங்களுடைய பலத்தை காண்பிக்கக்கூடிய வகையில் அல்லாமல், பிரதான கட்சிகளும் தொழிற்சங்கங்களும் ஆங்காங்கே கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

தொடர்ச்சி P2

# “மக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல வேண்டும்”

## நீதிமன்ற கட்டளை அதுவே என்கிறார் சுமந்திரன்

■ க. அகரன்

“நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வெடுக்கு நாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல வேண்டும் அதனை மதித்து அரச உத்தியோகத்தர்கள் செயற்படவேண்டும்” என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலைக்கு ஞாயிற்றுக்கிழமை (30) விஜயம் செய்த அவர் ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தினை பார்வையிட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்.

வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட பின்னர். கடந்த வெள்ளிக்கிழமை (28) மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட்டிருக்கின்றது.



தொடர்ச்சி P2

## வடக்கு, கிழக்கை

# சிங்கள மயப்படுத்த தீவிர திட்டம்

■ வா.கிருஸ்ணா

“வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த விஹாரைகளை நிறுவி வடக்கு, கிழக்கினை சிங்கள மயப்படுத்தும் வேலைத்திட்டத்தினை அரசாங்கம் முன்னெடுத்துவருவதாக” மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விவேகானந்தபுரம் பகுதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கும் வகையிலான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(30) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# எலிக்காய்ச்சலால் 2,500 பேர் பாதிப்பு


நாட்டில் நிலவும் அதிக மழையுடனான வானிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகளவில் காணப்படுவதாக சுகாதார தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2,500 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# உலக முடிவுக்குச் செல்பவர்களே உஷார்




■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து நானு ஓயா பட்டிபொல வீதி வழியாக ஹோர்டன் உலக முடிவு பகுதிக்கு வாகனத்தில் பயணிக்கும் பயணிகள் மாற்று வழியை பயன்படுத்துமாறு நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# மனைவியியால் ‘குடு அஞ்சு’ பிரான்ஸில் கைது



பிரான்ஸ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட, குடு மன்னன் என்றழைக்கப்படும் பாதாள உலகக் கோஷ்டியின் தலைவரென அறியப்படும் ‘ரத்மலானை குடு அஞ்சு’ என்றழைக்கப்படும் சிங்ஹாரகே சமிந்த சில்வாவை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மொட்டு எம்.பிகளின் எதிர்பார்ப்பு சூன்யமானது

எதிர்பார்க்கப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பு திகதி குறிப்பிடப்படாமல் தாமதமாகியுள்ளது என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் சிலர், கடும் அதிருப்தியில் உள்ளனர் என அந்தத் தகவல் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமென திகதி குறிப்பிட்டு கடந்த வாரத்தில் பல்வேறான செய்திகள் வெளியாகியிருந்தன. இதனால், மொட்டுக்கட்சியினர் பலர் பலத்த எதிர்ப்பார்ப்புடன் இருந்தனர்.



தொடர்ச்சி P2

# தொண்டையில் கைவைத்த நிலையில் வாழ்கின்றனர்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

■ நிதர்ஷன் வினோத்

எங்களைப் பொறுத்தவரையில் விஹாரை கட்டும் நடவடிக்கைகளுக்கு மக்கள் மட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது எனத் தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தையிட்டி மக்களின் தொண்டைகளில் கைவைத்த நிலையில்தான் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றார்.




தொடர்ச்சி P2

# புதன் முதல் மூடியிருக்கும்

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் மூடப்படவுள்ளன.

இதனை மீறி செயற்படும் மதுபானசாலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் வரி திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# கொரோனா மீண்டும் தலைதூக்குகிறது

கொரோனாத் தொற்று இலங்கையில் மீண்டும் தீவிரமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு அறிக்கையொன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இருவர் கொரோனாத் தொற்றினால் கடந்த இரண்டு நாட்களில் உயிரிழந்துள்ளனர்

மாத்தறை - ஹமந்துவ பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண் ஒருவரும், யட்டியந்தோட்டை பனாவத்தையில் வசிக்கும் 73 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ” கொரோனா மீண்டும் நாடு முழுவதும் பரவும் அபாயம் இருப்பதாகவும், குறிப்பாக முகக்கவசம் அணிந்து சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவது மிகவும் பொருத்தமானது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# புதனன்று ரங்கா ஆஜர்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொழும்பில் உள்ள தனிப்பட்ட வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. ஸ்ரீ ரங்காவை குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்துக்கு பெயர் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்டிப்படையில், எதிர்வரும் மே 3ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என கொழும்பு கோட்டை நீதவான் திலினி கமேக ரங்காவுக்கு, வெள்ளிக்கிழமை (28) உத்தரவிட்டிருந்தார்.

2022 ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இல்லத்துக்கு இனந்தெரியாத நபர்கள் தீ மூட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், , 2011 இல் வவுனியாவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட ரங்கா, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கிறீஸ் கத்தியை காட்டி அச்சுறுத்திய ‘ஆவா’

கோப்பாயில் பொலிஸாரிடம் கிறீஸ் கத்தியைக் காட்டி அச்சுறுத்திய சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. ஆவா வினோதன் மற்றும் மல்லாகம் ரஞ்சித் ஆகியோரே இவ்வாறு அச்சுறுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவ தினத்தன்று வீதிப் போக்குவரத்து ஒழுங்கு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார், உரும்பிராய் சந்தியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை மறித்து சோதனையிட முற்பட்டனர்.

இதன்போது பொலிஸாருக்கு கிறீஸ் கத்தியைக் காண்பித்த அவர்கள் மோட்டார் சைக்கிள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைக் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை மீட்ட பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 137 ஆவது சர்வதேச தொழிலாளர் தினம்

கொழும்பு, கண்டி மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தி கூட்டங்கள் இன்றையதினம் நடத்தப்படவுள்ளன. மலையகத்தில் பிரமாண்டமான மேதின ஊர்வலங்கள் இம்முறை இல்லை. எனினும், ஆங்காங்கே கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம், கொழும்பு-14 சுதந்திர சதுக்க உள்ளக அரங்கில் நடைபெறும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டமும் பேரணியும் பொரளை கெம்பல் மைதானத்தில் நடைபெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக்கூட்டம் கொழும்பு, ஏ.ஆர். குணசிங்ஹ விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம், கிளிநொச்சியில் நடைபெறும்.

சுதந்திர மக்கள் சபையின் மே தினக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெருமவின் தலைமையில் கண்டி சேர்க்கஸ் பூங்காவில் நடைபெறும்.

கொழும்பு ஹட்பாக்கில், உத்தர லங்கா சபையின் மேதினக் கூட்டம் நடைபெறுமென அறிவித்துள்ள விமல் வீரவங்ச எம்.பி, அந்தக் கூட்டத்தில் சபையில் அங்கம் வகிக்கும் சகல தலைவர்களும் உரையாற்றுவார்கள் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) மேதினக் கூட்டம் கொழும்பு விஹாரமகா தேவி பூங்காவில் நடைபெறும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கண்டியில் நடைபெறும்.

முன்னிலை சோஷலிஸ கட்சியின் மேதின பேரணி நுகேகொடையில் நடைபெறும்.

மலையகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் இம்முறை மேதின கூட்டங்கள் மற்றும் பேரணிகளை பிரமாண்டமாக நடத்தவில்லை. பிரதேசங்களிலும் தோட்டங்களிலும் மேதின நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

கொழும்பில் நடத்தவிருக்கும் பேரணிகள், கூட்டங்கள் ஆகியவற்றை முன்னிட்டு, விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# சிங்கள மயப்படுத்த தீவிர திட்டம்

லண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தினால் விவேகானந்தபுரம் பகுதியில் மாதிரிக்கிராமம் வேலைத்திட்டத்தின் கீழ் அகிலன் பவுண்டேசன் ஊடாக இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு அகிலன் பவுண்டேசனின் இலங்கைக்காக இணைப்பாளர் வி.ஆர்.மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதில்முக்கிய அதிதியாக இலண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தலைவரும் அகிலன் பவுண்டேசனின் ஸ்தாபகருமான மு.கோபாலகிருஸ்ணன் கலந்துகொண்டார்.

இதன்போது வாழ்வாதார உதவிகள்,பாடசாலை மாணவர்களுக்கான கற்றல்உபகரணங்கள்,வறியவர்களுக்கான அரிசிப்பொதிகள்,விசேட தேவையுடையவர்களுக்கான உதவிகள்,சிகிச்சைகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டதுடன் கிராம மக்களின் குடிநீர் தேவையினை நிவர்த்திசெய்யும் வகையில் இரண்டு பொதுக்கிணறுகள் திறந்துவைக்கப்பட்டதுடன் பயன்தரு மரங்களை நடுகை திட்டத்தினையும் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் விளையாட்டுக்கழகங்களுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் விவேகானந்தபுரம் பொதுநூலகத்திற்கான ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டதுடன் அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொள்ளப்பட்டது. இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்,"இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் மாறிமாறி இந்த நாட்டை ஆட்சிசெய்த அரசாங்கங்களினால் பல வழிகளில் அடிமைகளாக்கப்பட்டிருந்தார்கள்.

கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களுடைய மாகாணமாகயிருந்ததை இன்று பேரினவாதிகள் குடியேற்றங்கள் மூலமாகவும் பௌத்த மயமாக்கல் மூலமாகவும் கிழக்கு மாகாணத்தை சிங்கள பௌத்தமயமாக்கிவருகின்றனர், மாற்றமுற்படுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸவின் ஆட்சிக்காலத்தில் தொல்பொருள் திணைக்களம் ஊடாக கிழக்கு மாகாணத்திற்கான தனித்துவமான தொல்பொருள் செயலணியை உருவாக்கியிருந்தார்கள்.

11பேர் கொண்ட அந்த குழுவில் பௌத்தமதகுருமார்களும், ஓய்வுபெற்ற பாதுகாப்பு தரப்பினை சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்பட்டு தொல்பொருள் என்ற ரீதியில் பல இடங்கள் கபளீகரம் செய்யப்பட்டன.

இதுபோன்று பல இடங்களில் தொல்பொருள் என்ற பெயரில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடமாகாணத்தில் வெடுக்குநாறி மலை,குருந்தூர்மலை போன்ற இடங்களில் பௌத்ததினை திணிப்பதற்காக விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்.

அதுமட்டுமன்றி திருகோணமலையில் பாடல்பெற்ற தலமான கோணேஸ்வரத்தையும் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முயற்சிப்பதுடன் கன்னியா வெந்நீரூற்றில் பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

லண்டனில் இருபதுக்கு மேற்பட்ட சைவ ஆலயங்களின் ஒன்றியத்தின் தலைவராக இங்குவந்துள்ள இலண்டன் வோள்தஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தலைவர் மு.கோபாலகிருஸ்ணன் அவர்கள் இருந்துகொண்டு அனைத்து சைவ ஆலயங்களையும் ஒருங்கிணைத்து பௌத்தமயமாக்கலுக்கு எதிராக கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தினை முன்னேற்றவேண்டுமாகயிருந்தால்,இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவிசெய்யவேண்டுமானால் தொல்பொருள் திணைக்களம் ஊடாக சைவ ஆலயங்களை அழித்து பௌத்த ஆலயங்கள் அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்று குரல்கொடுத்ததுமட்டுமன்றி எமது உரிமைகளுக்காக நாங்கள் நடாத்தும்போராட்டங்களுக்கு அவரது தலைமையில் கைகொடுத்துக்கொண்டிருக்கின்றார்.

# "மக்கள் சுதந்திரமாக வந்துசெல்ல வேண்டும்"



குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. எனவே நீதிமன்றில் தவறான கருத்துக்கள் எதும் சொல்லப்பட்டால் அதற்கு பதில் அளிக்கும் விதமாக இன்றையதினம் நேரிலே ஆலயத்திற்கு சென்று விடயங்களை அவதானித்துள்ளோம். இது ஒரு மகிழ்ச்சியான விடயம்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்திற்கு வருகைதந்த பக்தர்களின் அடையாள அட்டைகள் பதிவுசெய்யப்பட்டமை தேவையற்ற ஒரு விடயம். இன்றையதினம் அவ்வாறான நடவடிக்கை இடம்பெறவில்லை. பொதுமக்கள் சுதந்திரமாக வந்துசெல்வதற்கு இடமளிக்கவேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது.

அதனை மதித்து அனைத்து அரச உத்தியோகதர்களும் செயற்ப்படவேண்டும். செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

# கொரோனா மீண்டும் தலைதூக்குகிறது

மேலும், கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏராளமான நோயாளிகள் IDH மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதன் முதல் மூடியிருக்கும்

இந்நாட்களில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகளுக்காக 1200 உத்தியோகத்தர்களை கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

குறித்த காலப்பகுதிக்குள் சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் உற்பத்தி தொடர்பில் தகவல்கள் கிடைக்குமாயின், அது தொடர்பில் கலால் வரி திணைக்களத்தின் '1913' என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க முடியும் எனவும் மக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# கிறீஸ் கத்தியை காட்டி அச்சுறுத்திய 'ஆவா'

இதேவேளை, மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் பொலிஸில் பாரப்படுத்துவதற்கு முன்னர் வெளியில் எடுப்பதற்கு பல மட்டங்களின் ஊடாக முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மொட்டு எம்.பிகளின் எதிர்பார்ப்பு சூன்யமானது

இந்நிலையில், அமைச்சர்களாக நியமிக்கப்படவேண்டிய மொட்டுக்கட்சியினரின் பெயர்கள் அடங்கிய பட்டியல், அந்த கட்சியின் தலைவரினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சில மாதங்களுக்கு முன்னரே அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எலிக்காய்ச்சலால் 2,500 பேர் பாதிப்பு

அத்துடன் "காலி, மாத்தறை மாவட்டங்களில் மாத்திரம் 19 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் எனவும், இதுவரை 229 பேர் எலிக்காய்ச்சலுடன் அடை யாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியியால் 'குடு அஞ்சு' பிரான்ஸில் கைது

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் மனித படுகொலை பலவற்றுடன் தொடர்புடையவர் எனக்கூறப்படும் 'குடு அஞ்சு' கடந்த புதன்கிழமை அன்று, பிரான்ஸ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு பாதுகாப்பு பிரிவு இலங்க அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இந்நிலையில், குடும்ப சண்டை காரணமாக அவருடைய மனைவி, பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, 'குடு அஞ்சு' என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் வீர் தனஞ்சய சில்வாவின் தந்தையான தெஹிவளை- கல்கிஸை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ரஞ்ஜன் டி சில்வாவை 2018 ஆம் ஆண்டு படுகொலைச் செய்தமை மற்றும் அங்குலானை பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டப்பட்டமை தொடர்பில் 'ரத்மலானை குடு அஞ்சு' வின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக முடிவுக்குச் செல்பவர்களே உஷார்



நுவரெலியா பகுதியிலிருந்து பிலக்வூல் சந்தி ஊடாக உலக முடிவு பகுதிக்கு உல்லாச பயணிகளுடன் சென்ற தனியார் பஸ் ஒன்று நேற்று முன்தினம் (29) மாலை வீதியில் புரண்டு விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதில் சாரதி காயங்களுக்கு உள்ளாகியதுடன் பஸ்ஸில் பயணித்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விபத்தினால் வீதி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே ,விபத்துக்கு உள்ளான பஸ்ஸை அப்புறப்படுத்தும் வரை இவ் வீதி ஊடாக உலக முடிவு பார்க்க பயணிக்கும் பயணிகள் மாற்று வழியாக ஓஹிய பகுதியில் இருந்து உலக முடிவுக்கு வரும் பிரதான வழியை பயன் படுத்துமாறு பொலிஸார் பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# தொண்டையில் கைவைத்த நிலையில் வாழ்கின்றனர்



திட்டமிட்ட சிங்கள மயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள் பறிபோய்க்கொண்டே இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். மக்களின் கோரிக்கைக்கு இணங்க தையிட்டியில் சட்டவிரோதமாக தனியார் காணியில் அமைக்கப்பட்ட விஹாரையினை பார்வையிட்டு களநிலவரங்களை ஆராய்ந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த விஹாரை அமைக்கப்பட்ட இடம் தனியாருக்கு சொந்தமானது. சட்டவிரோதமான இங்கு கட்டிட வேலைகள் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட பொழுதே மாவட்ட அபிவிருத்தி சபை, பிரதேச அபிவிருத்தி சபைக்கூட்டங்களில் இந்த சட்டவிரோத செயற்பாடுகளை வெளிப்படுத்தி இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என கோரியிருந்தோம்.

இந்த விடயம் தொடர்பாக இன்னுமொரு விசேட கூட்டம் கூடப்படும் என வாக்குறுதி அளித்திருந்தும் எந்தவிதமானகூட்டங்களோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இன்று இந்த விஹாரை இராணுவத்தினரின் முழுப்பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

தையிட்டியில் மட்டுமல்ல இன்று தமிழர்தாயக நிலப்பகுதி முழுவதிலும் சிங்களமயமாக்கல் வேலைத்திட்டத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் இந்த விடயத்தினை ஐ.நா மட்டிலும் பதிவு செய்திருக்கிறோம்.

இவ்வாறான நிலைகள் மத்தியில் அவர்கள் எங்களை அழைத்து இந்த விஹாரை சம்மந்தமாக பிரச்சனைகளை வெளிப்படுத்தி இருந்தார்கள். எங்களைப்பொறுத்த வரையில் இந்த மாதிரியான சட்டவிரோத இனவாத போக்கிற்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறிபோய்க்கொண்டே இருக்கும் என்றார்.

நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக எங்களுடைய முழு எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம். எங்களுடைய எதிர்ப்புக்களைத்தாண்டியே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற நிலையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

# எல்லை நிர்ணயம் தொடர்பில் மகஜர் கையளிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயக்குழு வெளியிட்ட நகலில் பாலமுனை பிரதேசத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பான விடயத்தினை சீரமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலும் மகஜர் கையளிக்கும் நிகழ்வும் அட்டாளைச்சேனை பிரதேச செயலத்தில் இடம்பெற்றது.
அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எ.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,
உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை நிர்ணயம் தொடர்பாக தேசிய எல்லை நிர்ணயக்குழு வெளியிட்ட புதிய நகலில் அட்டாளைச்சேனை அறபா வட்டாரத்துடன் பாலமுனை 2ஆம் பிரிவு கிராம சேவகர் பிரிவை இணைத்துள்ளமை தொடர்பான விடயத்துக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரியே பிரதேச செயலாளரிடம் இம்மகஜர் கையளிக்கப்பட்டது.



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் ஆணையாளர் மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கான மகஜரின் பிரதிகளும் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 'ஐ.எம்.எப்' இன் உதவி பெரும் பங்கு வகிக்கிறது



■ எம்.எஸ்.எம். ஹனீபா

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கு வெளிநாட்டு நாணய நிதியத்தின் உதவியானது பெரும் பங்கு வகிப்பதாக. தென்கிழக்குப் பல்லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் 45 ஆவது கூட்டம் தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக தொழில்நுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் பொருளியலாளர்கள் மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம் முஸ்தபா தலைமையில் வெள்ளிக்கிழமை (28) நடைபெற்றது, இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் தென்கிழக்குப் பிராந்திய விவசாய, மீன்பிடி துறைகள் பெரும் சவால்களை எதிர்க்கியுள்ளது. பிராந்திய பொருளாதார மேம்பாட்டிற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெரும் பங்கினை வகித்து வருகின்றது.

பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்க பல்கலைக்கழக பெருளியல் நிபுணர்கள் முக்கிய பங்களிப்பு செய்யவேண்டும் இதற்கு பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் பணி அவசியமாகும் என்றார்.

## "திக்கெட்டும் சதிரே" நாட்டிய சங்கமம்

■ வி.ரி. சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் "திக்கெட்டும் சதிரே" என்ற நாட்டிய சங்கமம் இன்று(1) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற இருக்கின்றது .

சர்வதேச நடன தினத்தையொட்டி காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பிக்க, சீர் பெறு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி ஃப்ளோரன்ஸ் கென்னடி கலந்து சிறப்பிக்கின்றார்.

கிழக்கு பல்கலைக்கழக அழகிய கற்கைகள் நிறுவனத்தின் நடனநாடகத்துறை தலைவர் கலாநிதி தாக்க்ஷாயினி பரமதேவன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார் ஆகியோர் முதன்மை அதிதிகளாக கலந்து சிறப்பிக்க உள்ளனர்.





## பாற்குட பவனி

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் முதலாவது வருடாந்த அலங்கார உற்சவத்தின் பாற்குட பவனி ஞாயிற்றுக்கிழமை (30) சிறப்பாக நடைபெற்றது.
ஆலயத்துக்கு மேற்கு புறமாக உள்ள சிவன் ஆலயத்தில் பாற்குடபவனி ஆரம்பமானது.
முன்னே ஆலய பரிபாலன சபை தலைவர் கி. ஜெயசிறில் பிரதான கும்பம் தாங்க, ஆலோசகர் வி.ரி. சகாதேவராஜா பிரதான மடை தாங்க ,ஆலய குரு சிவஸ்ரீ ச. கோவர்த்தனசர்மா வழிகாட்டலில் பாற்குடபவனி சிறப்பாக நடைபெற்றது.
வி.ரி. சகாதேவராஜா

## விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்

■ எஸ் தில்லைநாதன்



மோட்டார் சைக்கிளும் வேனும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைப்பெற்றுவந்த வடமராட்சி - புலோலியை சேர்ந்த சுந்தரமூர்த்தி சத்தியன் (வயது 27) என்பவர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதியில், ஆனையிறவில் கடந்த திங்கட்கிழமை (24) இடம்பெற்ற இந்த விபத்தில் இளைஞர் படுகாயமடைந்திருந்தார்.

கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இளைஞன் சனிக்கிழமை (29) காலை உயிரிழந்தார்.

## கைக்குண்டுடன் சுத்தா கைது

■ ராமு தனராஜா

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொடாங்வத்தை வீதி பூஜாநகர் பகுதியைச் சேர்ந்த 'மஹியங்கனை சுத்தா' என்று அழைக்கப்படும் நபர் மஹியங்கனை பொலிஸார் கைக்குண்டுடன் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் சிறுவர் துஸ்பிரயோகம் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக மஹியங்கனை பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் ஆவார்.

சந்தேகநபர், பாழடைந்த வீடொன்றில் மறைந்திருந்த வேளை சனிக்கிழமை இரவு 7 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.
அத்துடன் 29 வயதுடைய பூஜாநகர் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

## சுற்றிவளைப்புகள் தொடரும்



■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில் சுகாதார வைத்திகாரி பிரிவிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் மற்றும் மருத்துவ ஆய்வுக்கூடங்கள் என்பன பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஞாயிற்றுக்கிழமை (30) தெரிவித்த பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் இந்த சுற்றிவளைப்புகள் தொடரும் என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல். எம். றிபாஸின் ஆலோசனை அமைய மருந்தகங்கள் கண்காணிப்பு வாரத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட இந்த வேலைத்திட்டத்தில் வியாபார உத்தரவு பத்திரமில்லாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை, தொடர்பாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

## நிர்வாக குழு உறுப்பினர்கள் தெரிவு

பேராதனை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களின் கொழும்பு பரிவினரின் வருடாந்தக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

அதன்போது பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.
தலைவர்- எஸ்.எஸ்.பிரியாத் கப்ரால், செயலாளர்- பாலித சியம்பலப்பிட்டிய, பொருளாளர் எஸ். எம்.ஞானரட்ன. துணைத்தலைவர்கள்- ஜகத்தவஹா நாயக்க, ஜயந்த டொலவத்த, இந்திரா ஜய சேகர, ஹஸன்தா பலிஹக்கார, கே.எச்.எம்.எஸ்.பிரேமலால் நியமிக்கப்பட்டனர்.

உப செயலாளர்கள்- சிறியானி ஜயசிங்ஹ, குமுதுனி குலதுங்க, உப-பொருளாளர் ரஞ்சித் கருணாரத்ன, இணை ஆசிரியர்கள் ப.பாலசிங்கம், நெலியா பெர்ணாந்து, நிமால் குணவர்த்தன. ஒருங்கிணைப்பாளர் டப்ளியு. எம்.எச்.கீ வீரசிங்க, கணக்காளர். எஸ்.கீ.மாயதுன்னே



## சவர்க்காரம், சலவைத்தூள் உற்பத்தி பயிற்சி பட்டறை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

கிளிநொச்சி,யாழ். மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களின் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண்களுக்கு மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறி வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய தினங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 40 பெண் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு முழங்காவில் பொது மண்டபத்தில் குறித்த பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.
மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ.லெம்பேட், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.
இதன்போது அவர்களினால் 6 உற்பத்தி பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது.
மேலும் யாழ் தீவக பெண்களை உள்ளடக்கி தெரிவு செய்யப்பட்ட 40 பெண்களுக்கு சனிக்கிழமை(29) யாழ் வேலனை பிரதேச செயலகத்தில் குறித்த பயிற்சி முன்னெடுக்கப்பட்டது.
மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் ஜே.எம்.ஏ.லெம்பேட் ,மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.





## உணவு, நிலம், சுற்றாடல் தொடர்பில் விழிப்பூட்டல்

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கில் உணவு, நிலம், சுற்றாடல் தொடர்பாக கிராமிய மக்களுக்கு விழிப்பூட்டல் மட்டக்களப்பு மாவட்டமெங்கும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹபீப் முஹம்மது பாத்திமா சர்மிளா தெரிவித்தார்.
கிராமிய மக்களுக்கு வாழ்வும் வாழ்வாதாரமுமாக அமைந்துள்ள இயற்கையையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்கும் நோக்கில் இச்செயல்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.
இது விடயமான விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடலும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுர விநியோகமும் நடைபவனியும் மட்டக்களப்பு வாவியை அண்டியுள்ள ஆறுமுகத்தான்குடியிருப்பு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.
கங்காதேவி மீனவர் கூட்டுறவுச் சங்கப் பொருளாளர் உதயகுமார் சுலோசனாவின் இணைப்பாக்கத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மீனவர் சங்கத் தலைவர் எஸ். தர்மா, செயலளார் கே. மதி உட்பட பிரதேச களப்பு மீனவர்களும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் நாட்டின் கிராமிய மக்களைக் குறி வைத்துச் சுரண்டும் பல்தேசியக் கம்பனிகளின் செயல்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

# பொருட்களின் விலைகள் குறையாத போதிலும் பணவீக்கம் குறைந்துள்ளதா

மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் குறைந்துள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஆனால், பணவீக்கத்தில் தாக்கம் செலுத்தும் முக்கிய பொருட்களின் விலைகள் சந்தையில் குறைந்தபாடில்லை.

இதன் போது, கடந்த மார்ச் மாதம் முதல் அதிகரித்து வந்த பணவீக்கம், செப்டெம்பர் மாதம் உச்சம் தொட்டு, அதன் பின்னர் பணவீக்க வீழ்ச்சி எனும் நிலையை பதிவு செய்த வண்ணமுள்ளது என இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிலையானது, உண்மையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்ந்த நிலையைக் குறிக்கின்ற போதிலும், பணவீக்க நிலையில் காணப்பட்டதைப் போன்று அதிகம் உயர்வாக காணப்படாது எனவும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆண்டின் இறுதியினுள் இந்த பணவீக்க வீழ்ச்சியை ஒற்றை இலக்கப் பெறுமதிக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது. ஆனாலும், உணவுப் பொருட்கள் போன்றவற்றின் விலைகளில் தம்மால் ஓரளவுக்கு அப்பால் சென்று கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சந்தையில் காணப்படும் நிரம்பலை விட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான உயர்ந்த கேள்வி நிலவுகின்றமையால் தோன்றும் பணவீக்கம், கேள்வியினால் இழுக்கப்படும் பணவீக்கம் என அழைக்கப்படுவதாகவும், உற்பத்திச் செலவு அதிகரிப்புகளால் (உயர் எரிபொருள் விலை, சம்பளங்கள் மற்றும் கூலிகள் போன்றன) தோன்றும் பணவீக்க நிலை, செலவினால் தள்ளப்படும் பணவீக்கம் என அழைக்கப்படுகின்றது.

பொருளாதார நிபுணர்கள், அரசியல்வாதிகள் மற்றும் எதிர்வுகூறுவோரால் அவ்வப்போது சந்தை நிலைமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனுமானக் கணிப்புகளும் நுகர்வோர் மத்தியில் ஒருவித அச்ச உணர்வை தூண்டி, பணவீக்கமான நிலை ஏற்படுவதற்கு காரணியாக அமைந்துவிடுகின்றது.

பணவீக்கத்தை கணிப்பிடுவதில் செல்வாக்கும் செலுத்தும் காரணிகளில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் போன்றன அங்கம் பெறுகின்றன. கொழும்பையும், அதனை அண்மித்த பகுதிகளிலும் நிலவும் பிரதான நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் சராசரி விலை, ஒன்பது மாகாணங்களிலும் நிலவும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளின் சராசரி விலை போன்றன இந்த சுட்டெண்களில் உள்வாங்கப்படுகின்றன.

இந்த விலைச் சுட்டெண் மாற்ற வீதத்தை குறிப்பிடுவதாக முதன்மைப் பணவீக்கம் அமைந்துள்ளது. மின்சாரம், எரிபொருள், போக்குவரத்து விலை மாற்றங்கள், இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு, வானிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்கள், பண்டிகைக் காலத்துடன் தொடர்புடைய கேள்வி அதிகரிப்புகள், பண நிரம்பலின் அதீத வளர்ச்சி, வரி விதிப்புகளில் அதிகரிப்பு, பணவீக்கம் தொடர்பாக வெளியிடப்படும் பாதகமான எதிர்ப்பார்ப்புகள் போன்றன முதன்மைப் பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கவர்ச்சிக் காதலால், எடுத்த எடுப்பிலேயே காதலில் மூழ்கிவிடுபவர்கள்ப. பின்னர் இன்னல்களுக்குள் சிக்க வேண்டியிருக்கும். காதல், உண்மையானதா, காமத்திலானதா என்பதை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

புற அழகை மட்டும் முதன்மைப்படுத்தி மட்டும், காதலை முடிவு செய்யக்கூடாது. காமத்துடன் காதலிப்பவர்கள், அதை வெறுப்புடன் முடிக்கும் நிலைவரும்.

காதல் என்றவுடன், உள்ளத்தின் அழகைவிட, தேகத்தின் அழகே முக்கியம் என எண்ணும் தற்கால இளைய தலைமுறையினர், திருமணத்தின் பின்னரான அறவாழ்வைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் அல்லவா!

ஆழமான அன்பு நிலையில் கணவன் - மனைவி இருவரும் தூய்மையுடன், தெய்வீக இல்லறத்தில் இணைந்தால், அவர்களின் பரம்பரையும் நீடூழி வாழ்ந்து, உலகம் மெச்சும் தம்பதிகளாவர். தெய்வீகமற்ற வாழ்வு குடும்பசச்சரவுகள், விவாகரத்து எனப் பல இடையூறுகளைச் சந்திக்கின்றது. முதுமையிலும் களிப்புடன் வாழ்பவர்களைப் பாருங்கள். உண்மையான வாழ்க்கை அதுவென ஒத்துக்கொள்வீர்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய அரசியலில் சாதி, மதம்



என்.கே. அஷோக்பரன்

தமிழ்த் தேசிய அரசியலில் சாதி, மதம் என்பன மிக நீண்டகாலமாக பேசாப்பொருளாகவே இருந்தது வருகின்றன.

தமிழ்த் தேசிய அரசியல் மதம் பற்றிப் பேசுவதும் இல்லை, சாதி பற்றி வெளிக்காட்டிக் கொள்வதுமில்லை. 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது சா.ஜே. வே.செல்வநாயகத்தை எதிர்த்து தேர்தலில் நின்ற 'அடங்காத் தமிழன்' சுந்தரலிங்கம், 'வேலா?, சிலுவையா?' என்ற ரீதியிலான பிரசாரத்தையும் மேற்கொண்டார்.

இது ஓரளவிற்கு வெளிப்படையாக நடந்த பிரச்சாரம். ஆனால் அந்தத் தேர்தலில் பெரும்பான்மை சைவர்கள் நிறைந்த தொகுதியில், குறித்த பாணியிலான பிரச்சாரத்தை மீறியும், கிறிஸ்துவரான சா.ஜே.வே.செல்வநாயகம் வெற்றி பெற்றார். அதன் பின்னர், பகிரங்கமாக சைவ-கிறிஸ்தவ வேறுபாடு சார்ந்த பிரச்சாரங்கள் வெளிப்படையாக பெருமளவிற்கு தமிழ்த் தேசிய அரசியலில் முன்வைக்கப்படவில்லை.

சைவத் தலைமைகள், கிறிஸ்தவ தேவாலயத்தோடு நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தார்கள், அதுபோல கிறிஸ்தவத் தலைமைகள் சைவ சின்னங்களைச் சூடுவதை பொதுவெளியில் செய்வதைத் தவிர்க்கவில்லை. ஒரு வகையான புரிந்துணர்வு இருந்தது. இதற்குப் பல காரணங்களுண்டு. மிக முக்கிய காரணங்களுள் ஒன்று "சிங்கள-பௌத்த" பேரினவாதம். "சிங்கள-பௌத்த" பேரினவாதம் "தமிழ்" என்ற ஒற்றையடைளத்திற்குள் அனைத்துத் தமிழர்களையும் ஒன்றுபடுத்தி அடக்குமுறைக்குட்படுத்தியது.

தமிழர்களுள் சாதி, மத அடையாளங்கள் இருந்தாலும், தமிழர்களை எதிரிகளாக முன்னிறுத்திய பேரினவாத அரசியல் சக்திகளுக்கு அனைவரும் "தமிழர்களாக" மட்டுமே தெரிந்தார்கள். பேரினவாதத்தின் அடக்குமுறையைச் சமாளிக்க தமிழர்கள் தம்முள்ளான அடையாளப் பிரிவுகளில் சிக்கிக்கொள்ளாது இருக்க வேண்டிய அவசியப்பாடு இருந்தது. அது தமிழர் என்ற அடையாளத்தை வலுப்படுத்தி, அதன் உட்பிரிவுகளால் உடையாது நிற்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது என்றால் அது மிகையல்ல.

இதற்காக தமிழர்களுள்ளான சாதி, மத அடையாளங்கள் முற்றாக அற்றுப்போயின என்று சொல்லிவிட முடியாது. உயிர்போகும் பிரச்சினை தலையைக் காவுகொள்ள காத்திருந்து போது, அந்த சாதி, மத அடையாளங்கள் பயனற்றுப்போயின. சிங்களக் கிறிஸ்தவர்கள், வடக்கு-கிழக்கு தமிழ்க் கிறிஸ்தவர்களை "கிறிஸ்தவர்களாகப்" பார்த்தார்கள் என்பதை விட, தமிழர்களாகப் பார்த்தார்கள் என்பதுதான் நிதர்சனம்.

தெற்கிலுள்ள கத்தோலிக்கர்களே, வடக்கு-கிழக்கிலுள்ள மறைமாவட்ட ஆயர்களை ஐயத்துடன் பார்த்த சந்தர்ப்பங்களும் நிறையவே உண்டு. ஆகவே சிங்களவர், எதிர் தமிழர்கள் என்ற இந்தத் தீவின் இனவாத வெறியின் உச்சம்தான், ஒரு வகையில் தமிழர்களுக்கு உள்ளிருந்த சாதி, மத அடையாளங்கள் அரசியல் ரீதியில் முக்கியம் பெறாமல் போனமைக்கு முக்கிய காரணமாகும்.

மேலும், இதன் பின்னாலுள்ள இன்னொரு சமூகக் காரணியையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இன்றைய வடக்கு-கிழக்கில், கணிசமான சைவக் குடும்பங்களில், கிறிஸ்தவ உறவுகளுண்டு. அதுபோல கணிசமான கிறிஸ்தவக் குடும்பங்களில், சைவ உறவுகளுண்டு. இந்த சமூகக் காரணியும் கூட மத ரீதியான பிளவுகள் பெருமளவிற்கு வெடிக்காமைக்கு முக்கிய காரணம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண சமூகத்தில், குறிப்பாக யாழ் சைவர்களிடையே கிறிஸ்தவ விரோதப் போக்கு என்பது இயல்பாக அமையாமைக்கு அந்தச் சமூகத்திற்கு கிறிஸ்தவ மிஷனரிகள் ஆற்றிய பங்களிப்பும், குறிப்பாக கல்வி ரீதியிலான பங்களிப்பும், ஒருவகையில் மிக முக்கிய காரணமாகிறது. பிரபல இந்துப் பாடசாலைகள் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்தாலும், சென்.ஜோன்ஸ், யாழ் மத்திய கல்லூரி, வேம்படி, சுண்டிக்குளி ஆகியனவே இன்றும் பிரபலமான தெரிவுகளாக இருக்கின்றன.

இவை கிறிஸ்தவ பாடசாலைகளாக இருப்பினும், இங்கு சைவப்பிள்ளைகள் கணிசமானளவில் கல்வி கற்கிறார்கள். யாழ் சைவச் சமூகத்தின் பெரும் அடையாளங்களுள் ஒன்றான நல்லூர்க் கோயிலின் இன்றைய எஜமானர் கல்வி கற்றது சென். ஜோன்ஸ் கல்லூரியில். ஆகவே யாழ்ப்பாண சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கு, அதன் மத அடையாளங்கள் மட்டும் போதுமானது அல்ல. அதனைத்தாண்டி சமூக யதார்த்தத்தைப் புரிந்துகொள்வது அவசியம்.

இந்தப் பின்புலம் இருக்கத்தக்கதாகத்தான், இன்று மத அடையாளத்தை முன்னிறுத்திய அரசியல் நகர்வுகள் சில வடக்கு-கிழக்கில் இடம்பெறுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. "இந்து" அடையாளம் வடக்கு-கிழக்கில் சில தரப்பினரால் பகீரதப் பிரயத்தனத்துடன் முன்வைக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்திற்கும், வடக்கு-கிழக்கிற்கும் "இந்து" என்ற அடையாளம் புதியது. ஆம், இந்துக் கல்லூரிகள் இருக்கின்றன, ஆனால் அதனைத்தாண்டி அந்த அடையாளம் மிகப் புதியது. ஆறுமுகநாவலர் காலத்தில் கூட, யாழில் முன்னெடுக்கப்பட்டது சைவ மீளெழுச்சியே அன்றி, இந்து மீளெழுச்சியல்ல. இலங்கையில் பாடசாலைகளில் சமய பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. இங்கு சைவம் தான் கற்பிக்கப்படுகிறதேயொழிய, இந்து மதம் அல்ல. நிற்க. சைவ - இந்து சிந்தாந்தப் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, இந்த புதிய "இந்து" அடையாள நுழைப்பின் மூலத்தைத் தேடுவது அவசியமாகிறது.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிடுவது அவசியம். சைவர்கள் உள்ளிட்ட இந்துக்கள் அனைவருக்கும் இந்நாட்டில் தாம் நடத்தப்படும் விதம், தமது அடையாளங்கள், தமது வழிபாட்டுத்தலங்கள், தமது வாழ்வியல் முறை, தமக்கான அங்கீகாரம் என்பனவெல்லாம் பற்றிய நிறையக் கவலைகளும், கோவங்களும், ஆதங்கங்களும் இருக்கின்றன.

இது அரசாங்கம் பற்றியது மட்டுமல்ல. திருக்கேதீச்சரம் என்பது உலகச் சைவர்களுக்கு மிக முக்கியமான திருத்தலங்களுள் ஒன்று. பழம்பெருமை கொண்ட திருத்தலம். இராவணனின் மனைவி மண்டோதரியின் தந்தை மாயன் கட்டிய பெருங்கோவில் என்ற புராண நம்பிக்கையுமுண்டு. இந்தத் தீவின் பூர்வீக அடையாளங்களில் ஒன்றான திருக்கேதீச்சரத்தில் ஓர் அலங்கார வளைவு கூட கட்டப்படுவதைக்கூட சில கிறிஸ்தவர்கள் அனுமதிக்கவில்லை என்பது கவலைக்குரியது. மறுபுறத்தில், திருக்கேதீச்சரம் செல்லும் வீதியில் மாதா சொரூபம் திடீரென்று வைக்கப்பட்ட பிரச்சினையும் சைவ-கிறிஸ்தவ மக்களிடையே கசப்புணர்வை உருவாக்குவதாக இருக்கிறது. இந்த கசப்புணர்வுகளை தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள சில உள்நாட்டு, மற்றும் அந்நிய சக்திகள் கங்கணங்கட்டிக்கொண்டு செயற்படுகின்றன. அதன் விளைவுதான், இந்தத் திடீர் "இந்து" அமைப்புக்களின் தோற்றம். அமைதியான வழியில், விட்டுக்கொடுப்புக்களுடன், சைவர்களும், கிறிஸ்தவர்களும் நடந்திருந்தால், இந்தப் பிரச்சினை எழுந்திராது.

"தமிழ்த் தேசியம்" என்பது, தமிழ் மக்களிடையேயான சாதி, மத, பிரதேச அடையாளங்களை மேவிய "தமிழ்த் தேசிய" அடையாளத்தைக் கட்டியெழுப்பும் அரசியலாக இருந்தது. அதற்கான தேவையை உருவாக்கியது பேரினவாதம். இங்கு தேவைகள்தான் புத்துருவாக்கங்களுக்கு அடித்தளமாக இருக்கின்றன. சாதி ரீதியில் பிளவுபட்டிருந்ததொரு சமூகம், மத அடையாளங்களால் அடிபட்டுப் பிளந்திருக்கக் கூடியதொரு சமூகம், அதனை மேவி, "தமிழர்" என்ற அடையாளத்தால் ஒன்றிணைய வேண்டிய கட்டாயத்திற்கு தமிழர்களைப் பேரினவாதம் இட்டுச்சென்றமை, தீங்கிலும் விளைந்ததொரு நன்மையென்றால் அது தவறில்லை. 60 வருட திராவிட அரசியல் தமிழ்நாட்டில் சாதிக்காததைக்கூட, 30 வருட யுத்தம் வடக்கு-கிழக்கில் சாத்தியமாக்கியது. தமிழ்நாட்டில் இன்றும் சாதிக்கட்சிகள் இருக்கின்றன. சாதி கட்சி மாநாடுகள் நடக்கின்றன.

இலங்கைத் தமிழர் அரசியலில் அது சுத்தமாக இல்லை. அதற்காக சாதி இல்லை என்று சொல்லிவிட முடியாது. சமூகத்தின் சாதியடைளாங்கள் உள்ளன. ஆனால் சாதியின் அரசியல் வகிபாகம் என்பது மிக மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று மீண்டும் "சாதி" அரசியலையும் இங்கு உள்நுழைக்கும் சதிவேலையும் நடந்துகொண்டிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

"தலித்" என்பது 1880-களின் பிற்பட்ட காலப்பகுதியில் தீண்டத்தகாத சாதியினரைக் குறிக்க வட-இந்தியாவில் பயன்படுத்திய சொல். இந்தச் சொல் இலங்கையில் புழக்கத்திலேயே இல்லை. இலங்கைத் தமிழர் சாதிக்கட்டமைப்பு வர்ணாச்சிரமத்தின் பாற்பட்டதன்று. இன்று வடக்கு-கிழக்கில் "தலித்" அரசியல் என்று ஒருசிலர் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். யாருக்காக இது? எதற்காக இது? என்பன முக்கிய கேள்விகள்.

யுத்த நிறைவிற்குப் பின்னரான தமிழர் அரசியல் திக்குத்தெரியாத கடலில், மாலுமியில்லாத ஓட்டைப்படகாக மாறியிருக்கிறது. இங்கு நானே மாலுமி, நானே மாலுமி என ஒவ்வொருவரும் ஓட்டைப்படகை தம் பக்கத்திற்கு வலித்துக்கொண்டிருக்கிறார்கள். ஓட்டைப்படகோ, எங்கும் நகராமல், மூழ்கிக்கொண்டிருக்கிறது. இப்படி வலிப்பவர்களுள், இன்று புதிதான இணைந்துகொண்டவர்கள்தான் மேற்சொன்ன சாதி, மதக் காவலர்கள். எச்சரிக்கை.

## கடிதங்கள்

### காட்டு வேப்பம் மரத்தால் பாலத்துக்கு ஆபத்து

படத்தில் காணப்படும் இந்த பாலமானது மஸ்கெலியா நகரிலிருந்து சாமிமலை நகரத்துக்குச் செல்லும் ஒல்ட்டன் சந்தியில் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது வருடங்களுக்கு மேல் பலமைவாய்ந்ததாகும்.

இப்பாலமானது ஆற்றிலிருந்து எழுபது அடி உயரம் கொண்ட பாலமாகும். இது பண்டைய தொழில்நுட்ப முறைக்கு ஏற்ப தனித்தனி கருங்கற்களால் கட்டப்பட்டு பாரிய இரும்புகளால் இணைக்கப்பட்டுள்ளது.


கருங்கற்களுக்கு இடையில், ஓங்கி வளரக் கூடிய காட்டு வேப்பம்மரம் ஒன்று வளர்ந்து வருகின்றது இந்தமரத்தை வெட்டி அகற்றாவிட்டால் கற்களுக்கு இடையில் பாரிய விரிசல் ஏற்பட்டு இப்பாலம் இடிந்து விழும் நிலைக்கு உள்ளாகலாம்

எனவே, சம்பந்தபட்ட வீதி அபிவிருத்தி அதிகாரிகள் இதை கவனத்தில் கொண்டு இம்மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கின்றனர்.

இதேவேளை, குண்டும் குழியுமாக காணப்படும் இந்த வீதியையும் உரிய முறையில் புனரமைத்து தருமாறு பிரதேசவாசிகளும் சாதிகளும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

செ.தி.பெருமாள்






கழிவு முகாமைத்துவ மேம்படுத்தல் திட்டத்துக்கு

# 503 மில். ஜப்பானிய யென்கள் உதவி

கொவிட்-19 தொற்றுப் பரவலுடன் அதிகரித்துக் காணப்படும், தொற்றுகளைக் கொண்ட கழிவு முகாமைத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்காக 503 மில்லியன் ஜப்பானிய யென்களை (3.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வழங்குவதற்கான பரிமாற்ற உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி கைச்சாத்திட்டிருந்தார். இந்நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கொவிட்-19 தொற்றுடைய கழிவுகளை நிர்வகிப்பது தொடர்பான 2020 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட சுகாதார அதிகார அமைப்புகளின் வழிகாட்டுதல்களின் பிரகாரம், மருத்துவ கழிவு தூய்மையாக்கல் மற்றும் தொற்று நீக்கல் சாதனங்களின் பயன்பாட்டினூடாக இந்த கழிவுகளை நிர்வகிப்பது ஊக்குவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், நிதி நெருக்கடி நிலை காரணமாக, போதியளவு வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

மேலும், கொவிட்-19 தொற்றுப் பரவலுடன், தொற்றுக்களடங்கிய கழிவுகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில், இலங்கையில் காணப்படும் தொற்றுகள் அடங்கிய கழிவு நிர்வகிப்பு வசதிகளின் பதப்படுத்தல் வசதிகளின் கொள்ளளவை விட அதிகரித்த தேவை காணப்படுகின்றது. அதன் காரணமாக, வைத்தியசாலை ஊழியர்கள், தொற்றுகள் அடங்கிய கழிவுப் பொருட்களுக்கு வெளிப்படுத்தப்படுவதுடன், வைத்தியசாலைகளை சூழ காணப்படும் குடியிருப்பாளர்களுக்கு கழிவுகளை திறந்தவெளிகளில் எரிப்பதால் டையொக்சின்களின் வெளிப்பாடு, புகை மற்றும் துர்மணம் போன்ற சுகாதார சீர்கேடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும் எழுந்துள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக, வெப்பநிலை கட்டுப்பாட்டுடனான மருத்துவ கழிவு தூய்மையாக்கிகள் மற்றும் வாயு தூய்மையாக்கல் சாதனங்கள் போன்றன இலங்கையின் 9 மாகாணங்களையும் உள்வாங்கி 15 வைத்தியசாலைகளில் நிறுவப்படும். இந்தத் திட்டத்தினூடாக, தொற்றுக் கழிவுகளை கையாளும் வசதிகளின் கொள்ளளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், குறைந்தளவு சூழல் தாக்கங்களுடன் அதிகளவு கழிவுகளை பதப்படுத்துவதற்கு உதவியாக அமைந்திருக்கும். மேலும், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படக்கூடிய சுமையை தணிப்பதிலும் பங்களிப்பு வழங்கும்.

# INTEPID இலங்கையில் மேலும் முதலீடு




உலகின் மாபெரும் சாகச பிரயாண ஏற்பாட்டு நிறுவனமான Intrepid Travel, இலங்கையில் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிப்பு செய்ய முன்வந்துள்ளது. அதன் பிரகாரம், கொழும்பிலுள்ள தனது செயலணியை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதுடன், சர்வதேச ரீதியில் காணப்படும் மாபெரும் செயலணியையும் கொண்டுள்ளது. 230க்கும் அதிகமான ஊழியர்களையும், பிரயாண தலைவர்களையும் கொழும்பில் கொண்டுள்ளது.

அண்மையில் நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் நிறைந்த சூழல் காரணமாக, சில பல்தேசிய நிறுவனங்கள் அண்மையில் மேற்கொண்டிருந்த செயற்பாடுகளுடன் ஒப்பிடுகையில், இது முற்றிலும் மாறுபட்டதாக இது அமைந்துள்ளது.

கொழும்பில் தனது வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கு Intrepid தன்னை அர்ப்பணித்துள்ளது. அதற்காக மேலும் 30 பணி நிலைகளுக்காக இந்த ஆண்டில் இலங்கையில் நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். Intrepid கொழும்பின் சிறப்பு நிலையத்தினூடாக, சர்வதேச நிறுவனத்துக்கு பல்வேறு பணி நிலைகளினூடாக ஆதரவளிக்கப்படுவதுடன், அவற்றில் பொறியியல், தொழில்நுட்ப கட்டமைப்பாளர்கள், மனித வளங்கள், நிதியியல் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்றன அடங்குகின்றன.

இலங்கைக்கான தனது மேலதிக அர்ப்பணிப்பினூடாக, 2023 ஆம் ஆண்டில் புதிய கட்டணம் செலுத்தப்படும் பட்டதாரிகள் பயிலுநர் இணைப்பு திட்டத்தையும் அறிமுகம் செய்ய Intrepid திட்டமிட்டுள்ளது. Intrepid கொழும்பின் எதிர்கால தலைவர்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் 15 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டு, ஆறு மாத காலப்பகுதிக்கு பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுவர்.

நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், Intrepid அவுஸ்திரேலியாலைத் தளமாகக் கொண்ட பிரதம நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ் தோர்ன்டன் மற்றும் அவரின் பிரதான நிர்வாக அணியினர் தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதுடன், உள்நாட்டு அணியினருடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பிலுள்ள சிரேஷ்ட தலைமைத்துவ அணியினரில், பிரதம தொழில்நுட்ப அதிகாரி அனு கருணாதிலக மற்றும் ஆசிய முகாமைத்துவ பணிப்பாளர் நடாலி கிட் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

தோர்ன்டன் கருத்துத் தெரிவிக்கையில், “எமது அணியின் வளர்ச்சியையும் சாதனைகளையும் கொண்டாடும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக திகழ்வதையிட்டும், பெண்களுக்கு பணியாற்றுவதற்கு சிறந்த இடங்களில் ஒன்றாக அமைந்திருப்பதையிட்டும் Intrepid மிகவும் பெருமை கொள்கின்றது.” என்றார்.

Intrepid இன் இலங்கைக்கான பொது முகாமையாளர் பூர்ணிகா தெல்பசித்ரா குறிப்பிடுகையில், தொற்றுப் பரவல் மற்றும் அரசியல் நெருக்கடி நிலைகளிலிருந்து சர்வதேச சுற்றுலா மீண்டும் படிப்படியாக தலைதூக்க ஆரம்பித்துள்ள முக்கியமான தருணத்தில் நிர்வாக அணியினரின் விஜயம் அமைந்துள்ளது. “மக்களை ஒன்று திரட்டுவது மற்றும் மாறுபட்ட கலாசாரங்களை பகிர்வது என்பதில் Intrepid கவனம் செலுத்துகின்றது. எனவே, எமது சிரேஷ்ட தலைமைத்துவ அணியினரை இங்கு வரவேற்பதில் நான் பெருமை கொள்கின்றேன்.” என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “எம்மால் வழங்கக்கூடிய சேவைகள் பற்றியும், இலங்கையையும் சர்வதேச ரீதியில் வெளிப்படுத்துவதையிட்டு எமது அணியினர் மகிழ்ச்சியடைகின்றனர். Intrepid ஐச் சேர்ந்த அனைவரும், சுற்றுலாப் பயணிகள் எமது அழகிய தேசத்துக்கு மீண்டும் வருகை தருவதை காண ஆவலுடன் உள்ளோம். அதனூடாக எம்மால் மேலும் பல சமூகங்களுக்கு ஆதரவளிக்க முடியும் என்பதுடன், அதிகளவு சுற்றுலா தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.” என்றார்.

காலநிலை அவதானத்துடனான பிரயாணத் தெரிவுகளை வழங்குவதில் Intrepid முன்னோடியாகத் திகழ்வதுடன், இலத்திரனியல் வாகனங்களைப் பயன்படுத்துவதில் இலங்கையில் புத்தாக்கமான மாற்றத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கின்றது. நிறுவனம் விமானநிலைய மாற்றங்களுக்காக EVவாகனங்களை அடிக்கடி பயன்படுத்துவதுடன், 2022 ஆம் ஆண்டில் இரு முழுமையான மின்வலுவூட்டப்பட்ட சுற்றுப் பயணங்களை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.



# இன முரண்பாட்டுத் தீர்வில் பிரேமதாசாவின் வகிபங்கு

கலாநிதி. ச. பாஸ்கரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர்
அரசறிவியற் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்)



மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 30 ஆவது நினைவு தினம் இவ்வருடம் அனுட்டிக்கப்படுகின்றது. இலங்கை மக்களின் நெஞ்சில் நீங்காத நினைவுகளுடன் என்றும் உயிர் வாழ்கின்ற முன்னைய ஜனாதிபதிகளில் ஒருவரே ரணசிங்க பிரேமதாச ஆவார்.

இவர் இலங்கை மக்களுக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியது. இவர் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்தும் ஜே. ஆர். ஜெயவர்தனாவின் அரசில் பிரதமராக இருந்தும் பல பணிகளை ஆற்றியிருக்கின்றார். இவர் ஆற்றிய பணிகளுக்காக இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 1986 இல் இவருக்கு ‘சிறீ லங்காபிமான்ய’ என்ற இலங்கையின் அதியுயர் பட்டம் வழங்கப்பட்டது.

இவர் 1993 இல் கொழும்பு நகரில் நடைபெற்ற மே தின பேரணி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். தொழிலாளர் தினமாகிய மே தினமே இவரது நினைவு தினமாக அனுட்டிக்கப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம், கலாசாரம், இன நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்காக இவர் ஆற்றிய சேவைகள் என்றென்றும் போற்றப்பட வேண்டியவை ஆகும். ஆயினும் இலங்கையின் இன முரண்பாட்டுத் தீர்வுக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ரணசிங்க பிரேமதாச வடக்கு மற்றும் தெற்கில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற மற்றும் இந்தியப் படைகள் வடக்கு கிழக்கில் நிலைபெற்றிருந்த மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இலங்கை இன முரண்பாட்டை தீர்ப்பதற்கும் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறைமையைப் பேணுவதற்கும் மிகப்பெரிய பங்களிப்பை ஆற்றி இருந்தார்.

இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கையில் வடக்கு கிழக்கில் நிலை கொண்டு இருந்த பொழுது இரு முக்கிய பிரச்சினைகள் காணப்பட்டன. ஒன்று இந்திய ஆக்கிரமிப்பு இலங்கையின் மீது காணப்பட்டதும் இலங்கை தனது இறைமையினை பேண வேண்டிய தேவை காணப்பட்டதும் ஆகும். இரண்டாவது வடக்கு கிழக்கில் தமிழர்கள் இந்திய அமைதி காக்கும் படையினரால் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு அவர்கள் உரிமைகள் சீரழிக்கப்பட்டமை ஆகும்.

எனவே இலங்கையில் இன முரண்பாடு தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் முதலில் இந்த இரண்டு பிரச்சனைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் காணப்பட்டது. இதன் காரணமாக இதற்கான அடித்தளத்தை ஏற்படுத்துவதற்கு ரணசிங்க பிரேமதாச முன்னின்று உழைத்தார். அதனடிப்படையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்தார் இது மிக முக்கியமான ஒரு விடயமாகப் பார்க்கப்படுகின்றது. நமது பிரச்சனைகளை நமது நாட்டுக்குள்ளே நாமே தீர்க்க வேண்டும்; என்ற எண்ணத்தின் அடிப்படையில் முதன் முதலில் புலிகளுக்கு அங்கிகாரம் வழங்கி அவர்களுடன் இன முரண்பாட்டை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான பேச்சு வார்த்தையை ஆரம்பித்த பெருமை இவரேயே சாரும். தெற்கில் எழுந்த மிகப்பெரிய எதிர்ப்புகளையும் தாண்டி இலங்கையின் இறைமையினைப் பாதுகாப்பதற்கும் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் இந்திய படையினால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியங்களை தடுத்து நிறுத்துவதற்கும் இவர் புலிகளுடன் பேசினார். இது இன முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கும் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்குமான மிக முக்கியமான அடிப்படையை ஏற்படுத்திய ஒரு விடயமாக குறிப்பிடப்படுகின்றது.

இந்திய அமைதி காக்கும் படைகள் இலங்கையில் இருக்கும் பொழுது இந்திய தலையீட்டினை எதிர்த்து எமது பிரச்சனைகளுக்கு நாமே தீர்வு காணவேண்டும் என்று கூறி துணிவுடன் முதன் முதலில் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து இன நல்லிணக்கத்திற்கான பாதையைத் தொடக்கி இலங்கையின் இறைமையினைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்திய அமைதி காக்கும் படையினைத் திருப்பி அனுப்புவதில் மிகத் துணிவுடன் செயற்பட்டு வெற்றிகண்டவர். இதனால் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு எதிராக இந்திய அமைதி காக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்களை முடிவுக்கு கொண்டுவந்து இன நல்லிணக்கம் ஏற்பட வழிவகுத்தார்.

தொழில் கட்சியில் இருந்து அரசியலுக்கு பிரவேசித்த ரணசிங்க பிரேமதாச கொழும்பு மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாகி, பிரதி மேயராகவும் பதவியேற்று பின்னர் 1965 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு சென்று உள்ளூராட்சி அமைச்சராகவும், பிரதமராகவும் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவி வகித்தவர். இவர் பிரதமராக இருந்த போது ‘செமட செவன - அனைவருக்கும் நிழல்’ எனும் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து பணியாற்றியவர். இதனால் எத்தனையோ ஏழை மக்கள் பயனடைந்தனர். வடக்கு கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டதனால் இனப் பாகுபாடின்றி இனநல்லிணக்கத்திற்கான அடித்தளம் ஏற்படுவதற்கும் இதனால் வழியேற்பட்டது. இவர் கம் உதாவ, உதாகல கம்மான ஆகிய முன்மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் ஊடாக இன மற்றும் மத வேறுபாடின்றி அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பல திட்ட்ங்களை மேற்கொண்டார்.

கிராமிய அபிவிருத்தி தொடர்பில் கனவு கண்ட ரணசிங்க பிரேமதாச ஆடை உற்பத்தி தொழிற்சாலை திட்டங்கள் மூலமும் வறிய மக்களுக்காக ஜன சவிய திட்டத்தின் மூலமும், பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மூலமும், சிறுவர்களின் போசாக்கை மேம்படுத்துவதற்கான மதிய உணவுத் திட்டத்தின் மூலமும் நாட்டின் அபிவிருத்தியையும் ஏற்றுமதி வருமானத்தையும் மேம்படுத்த முன்னின்று உழைத்தார். இதனால் வடக்கு கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வறிய மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதற்கும் வழியேற்பட்டது. இத்திட்டங்கள் சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் பெற்றன. ஜனசவிய வறுமை ஒழிப்புத் திட்டம் தெற்காசியாவின் முதன்மையான வறுமை ஒழிப்புத் திட்டமாக சர்வதேச அளவில் போற்றப்பட்டது. அவரது சேவைக்கு அங்கீகாரமளிக்கும் வகையில், 1987 ஆம் ஆண்டை உலக குடியிருப்பு வருடமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது.

இவ்வாறு இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இவர் மேற்கொண்ட பணிகள் அளப்பரியதாகும். அதுமட்டுமன்றி இலங்கை என்ற தேசத்தின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காக இந்தியா போன்ற பிராந்திய வல்லரசுகளையே எதிர்த்து இலங்கையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தியவர். இந்திய ஆக்கிரமிப்பு அமைதிப் படையினால் தமிழ் மக்களின் உரிமைகள் சீரழிந்த பொழுது அதை எதிர்த்து புலிகளுடன் பேசி இந்திய படையை இந்தியாவுக்கே திருப்பி அனுப்பியவர். இதன் மூலம் இந்நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்கான தெளிவான பாதையை எமக்கு விட்டுச் சென்ற பெருமை இவரையே சாரும். இந் நாட்டு மக்களின் எண்ணங்களில் நிலைத்திருக்கும் சிறந்த தலைவராக ரணசிங்க பிரேமதாச என்றும் போற்றப்படுகின்றார். இவர் வழியில் அவரது புதல்வர் சஜித் பிரேமதாச பயணிப்பது இந்நாட்டு மக்களுக்கு கிடைத்த பெரும் பேறாகும்.

# குடியேற்றங்களும் நல்லுறவும்

எல்.தேவஅதிரன்

இலங்கையில் இன முரண்பாட்டுச் சிக்கல்கள் காரணமாக 1978களில் ஆரம்பித்த யுத்தம் 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் மௌனிக்கச் செய்யப்பட்டதையடுத்து உருவாகியிருக்கின்ற நல்லிணக்க மற்றும் நல்லுறவு எவ்வாறான நிலையில் இருக்கிறது என்பது ஆராய்வுக்குரியதே எனினும் மக்களின் மனங்களில் இருந்து வெளிப்படும் கருத்துகள் பார்க்குமிடத்து, ஏதோவோர் இடத்தில் முடிச்சு அவிழ்க்கப்படவேண்டும்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டம் தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவினங்களையும் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் பிரதேசமாகும். இங்கு தமிழ், முஸ்லிம்களுடன் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களும் வர்த்தகத்தில் ஈடுபடுகிறார்கள். ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டுவருகிறார்கள். அத்துடன் இவர்கள் அனைவரும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் காணப்பட்டாலும் நல்லிணக்கத்துடனேயே வாழ்ந்தும் வருகிறார்கள்.

இருந்தாலும் அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்கள குடியேற்றங்கள் மூலமாக ஒருசில பிரச்சினைகள் ஏற்பட்டுவருகின்றன என்றே கூற முடியும்.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் தமிழர்கள் "எங்களது பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதால் எங்களுடைய ஜனநாயக ரீதியான நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக பிரதேச சபை பிரதிநிதித்துவத்துக்கும் பிரச்சினைக்குள்ளாகிறது. நீண்ட காலத்தில் மாகாண சபை, பாராளுமன்றம் வரை இது செல்லலாம்" என்று கூறுகின்றனர்.

"எங்களுக்கு இங்கு தமிழர்களால் எந்தப் பிரச்சினையும் இல்லை. 2013ஆம் ஆண்டு இங்கு குடியேறினோம். பொருளாதாரப் பிரச்சினைகளைத் தவிர இன ரீதியான பிரச்சினைகளை நாங்கள் எதிர்கொண்டிருக்கவில்லை" என்கிறார் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் நெடுங்கேணி பிரதேசத்தில் மகாவலித் திட்டத்தின் ஊடாக குடியேற்றப்பட்டிருக்கும் ரி.எம்.இந்திராணி.

வவுனியாவின் எல்லைப் பிரதேசமான நெடுங்கேணி பிரதேசத்தில் அரசாங்கத்தினால் 2013ஆம் ஆண்டு குடியேற்றப்பட்டவர் இந்திராணி.

### கருணாசிங்க

மகாவலித் திட்டத்தின் கீழ் குடியேறி நெடுங்கேணியில் சில்லறை வியாபாரக் கடையொன்றை நடத்திவரும், ஆர்.எம்.கருணாசிங்க,

"நாங்கள் இங்குவந்த காலத்தைப்போல் இப்போது பிரச்சினைகள் குறைவு. எங்கள் கிராமத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தமிழ் சகோதரர்களும் இருக்கிறார்கள்" என்கிறார்.

### சிவசெந்தில்நாதன்

இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு, திட்டமிட்ட குடியேற்றங்களும் காரணமாக இருந்திருக்கின்றன. யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்ட பின்னரும் அவ்வாறான குடியேற்றங்கள் நிறுத்தப்படவில்லை. மகாவலித் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் மாத்திரமல்ல ஏனைய மகாவலித் திட்டத்தின் கீழுள்ள பிரதேசங்களிலும் இவ்வறான குடியேற்றங்கள் நடைபெறுகின்றன. இருந்தாலும் வடக்கு கிழக்கு தமிழர்களது பிரதேசங்களில் பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றுகையில் பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

தங்களது பூர்வீக நிலங்கள் பறிபோகின்றன. தமிழர்களின் விகிதாசாரம் குறைக்கப்படுகிறது என்ற வகையிலான குற்றச்சாட்டுக்கள் தமிழர்கள் தரப்பிலிருந்து முன்வைக்கப்படுகின்றது.

"குடியேற்றப்படுபவர்கள் பயிர் செய்வதற்கு காடுகளை வெட்டி வேலை செய்து காணிகளை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் எங்களது காணிகளை சரியான முறையில் சீர் செய்வதற்குக் கூட எங்களால் முடிவதில்லை." என்று வவுனியாவைச் சேர்ந்த சிவகுரு சிவசெந்தில்நாதன் கூறுகிறார்.

அதிகாரிகள் தரப்பில் பெரும்பான்மை சிங்களவர்களுக்கிருக்கும் அனுசரணைகள் தமிழ் மக்களுக்கு இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டு அவதானிக்கப்படுகிறது.

அதே போன்று "இவ்வாறு சிங்கள மக்கள் எம்முடைய பிரதேசங்களுக்குள் குடியேற்றப்படுவதனால் எதிர்காலத்தில் எவ்வாறான பிரச்சினைகள் உருவாகும் என்று சொல்லமுடியாதுள்ளது. குறிப்பாக காணிப்பிரச்சினை, அரசியல் பிரச்சினைகளும் ஏற்படலாம்" என்ற கருத்துக்களும் வெளியிடப்படுகின்றன.

யுத்த காலத்தில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். 1990களில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வேறு மாவட்டங்களில் வசித்துவந்த முஸ்லிம் மக்கள் 2009க்குப் பின்னர் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றனர்.

"அந்தக்காலத்திலிருந்து நாங்கள் நல்லுறவுடன்தான் வாழ்ந்து வருகிறோம். தமிழ் மக்களும் அன்புடன்தான் இருந்து வந்தார்கள். 1990ஆம் ஆண்டு நடைபெற்ற விடயம் எங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எங்களுக்குமிடையிலானதல்ல. அது இயக்கங்களின் ஏதோ ஓர் அரசியல் ரீதியான பிரச்சினை. 97இல் நாங்கள் வந்தவேளை அதனை அவர்கள் துரதிஸ்டவசமானதாக தெரியப்படுத்தினார்கள். அதற்காக வருத்தமும் தெரிவித்தார்கள்" என்கிறார் யாழ் நகரில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் எம்.எம்.தாஹிர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் யாழ். பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தலைவியான சிகானா அனிஸ், "1990இல் இடம்பெயர்ந்து 2010இல் குடியேறி பல்வேறு சமூக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறேன்;. யாழ்ப்பாணத்தில், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் எங்களால் அவதானிக்க முடிகின்ற விடயம். எங்களது மக்கள் எல்லோரும் இங்கு வந்து குடியேறுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படாமையே தவிர வேறொன்றுமில்லை. தமிழ்ப் பெண்களுடன் இணைந்து வேலை செய்கிறோம். உறவாடுகிறோம். பண்டிகைக் காலங்களில் தமிழ் மக்கள் கூட முஸ்லிம் வியாபாரிகளைத்தான் அதிகம் நம்பியிருக்கிறார்கள். நியாயமான, குறைந்த விலையில் விற்பார்கள் என்ற ஒரு நிலைப்பாடு இப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது" என்றார்.

### சிகானா அனிஸ்

யாழ். பெண்கள் அபிவிருத்தி மையத்தின் தலைவியான சிகானா அனிஸ்

"1990ல் வடக்கிலிருந்து வெளியேறியவர்களில் நானும் ஒருத்தி. தமிழ் மக்களோடு வாழக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் அன்னியோன்னியம், சுமுகமான நிலை இருக்கிறது. தொழில் செய்வதில் எந்தத் தடையும்; இல்லை" என்று தெரிவிக்கிறார் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் வசித்துவரும் முஸ்லிம் இனத்தை; சேர்ந்த பெண்ணான எஸ்.எம்.பாஜிதா.

இதேவேளை, எமுஸ்லிம் மக்களது மீள் வருகை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.சௌந்தரராஜன்

"ஒரு காலத்தில் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் கசப்புணர்விருந்தது. உண்மை. ஆனால் தற்போதைய நிலையில் அவற்றையெல்லாம் மறந்து முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் தமிழ் மக்களுடன் பழகுகிறார்கள். அவர்களுடன் எந்த விதமான வேறுபாடுகளும் எங்களுக்குள் கிடையாது. ஒரு காலத்தில் மட்டுமல்ல. எந்தக்காலத்திலும் அவர்கள் சகோதரத்துவத்துடன் தான் வாழ்கிறார்கள்" என்று கூறுகிறார்.

### சௌந்தரராஜன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்.சௌந்தரராஜன் கருத்துரைக்கையில், "முஸ்லிம்களது சந்தோசமான விழாக்களில் தமிழ் மக்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைகிறார்கள். வியாபார நிலையங்களில் எம்மவர்களும், எங்களது வியாபார நிலையங்களில் முஸ்லிம் இளைஞர்களும் வேலை செய்கிறார்கள். இது ஒரு சகோதரத்துவமான நிலை என்றுதான் சொல்லலாம். இது வெளிப்படையாகவே தெரிந்து கொள்ளக்கூடிய விடயம்" என்றும் அவர் தெரிவித்தார்.



தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் என பல்லினம் கொண்ட நாட்டில் ஏற்பட்ட இன வன்முறை யுத்தமானது பல்வேறு மாற்றங்களையும், அழிவுகளையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

புன்னைக்குடா, மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே 18 கிலோ மீற்றரிலுள்ள மீன்பிடிக் கிராமம். இங்கு பிறின்சஸ் பெரேரா கடற்தொழில் அமைச்சராக இருந்த காலத்தில் மீன்படித் தொழிலை மேம்படுத்துவதற்காக 1979ஆம் ஆண்டில் மாத்தறை, காலி மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 83களில் உருவான இன முறுகல் இவர்களை இடம்பெயர்ந்து மாத்தறைப் பிரதேசத்திற்குச் செல்ல வைத்தது. 2009க்குப் பின்னர் இவர்கள் இப்பிரதேசத்திற்கு வந்து மீண்டும் குடியேறியுள்ளனர். அடிப்படை வசதிகள் முழுமையாக இல்லாவிட்டாலும் அவற்றினை சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியபடியே சிறிய வியாபாரம், கடற்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டவண்ணம் வாழ்ந்து வருகிறார்கள்.

தங்களது வாழ்க்கை நிலை குறித்து புன்னைக்குடாவில் வதியும் சிங்கள இனத்தவரான 65 வயதுடைய டப்ளியூ. எச்.ரத்னபால,

"எனக்கு 5 பிள்ளைகள், எங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லாமல்தான் இருந்தோம். ஆமி உடுப்பு போட்ட ஆக்கள்வந்து சொன்னார்கள். எங்களுக்கு நீங்கள் இருக்கிற பிரச்சினை இல்லை. ஆனால் வேற யாரும் வந்து ஏதும் நடந்தால் எங்களுக்கு ஒண்டும் செய்ய ஏலாது என்று, அதன் பிறகுதான் நாங்கள் மாத்தறைக்கு போனம். அங்கு சென்று அகதி முகாம்களில் இருந்து பின்னர் வேறு இடங்களுக்குச் சென்ற சிறு வீடுகள் அமைத்துக் கொண்டு இருந்தோம். பிரபாகரன் சேர் இறந்ததன் பின்னர் 2010அளவில்தான் இங்கு வந்தோம்" என்கிறார்.

"இங்கு பிறந்தவர்களும் இருக்கிறார்கள். அதற்குப்பிறகு மாத்தறைப் பிரதேசத்தில் பிறந்தவர்களும் இருக்கிறார்கள். இங்கு வந்தபோது ஒன்றுமில்லை. அவை எல்லாம் அழி;க்கப்பட்டு விட்டன. திம்புலாகல ஹாமதுறு ஆட்கள் தான் சின்ன வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். அதில்தான் இருக்கிறோம். மீன்பிடித் தொழில்கள் குறைவு இங்கு சிலர் கடைகள் போட்டு வியாபாரம் செய்கிறார்கள்" என்றும் அவர் கூறுகிறார்.

### டப்ளியூ. ஏச்.ரத்னபால –புன்னைக்குடா

"இங்கு சிலருக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது. சிலருக்கு அந்த வசதியும் இல்லை. கணவர் கடல் தொழிலுக்குச் செல்கிறார். 2008இல் இருந்து வந்து வந்து போனோம். பின்னர் 2010 மீண்டும் வந்து குடியேறினோம். கடல் தொழிலைத்தான் செய்கிறோம். வருமானம் ஓரளவுக்கு கிடைக்கிறது. அதன்மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் வாழ்க்கை நடத்துகிறோம்" என்கிறார் புன்னைக்குடாவில் வதியும் சிங்களப் பெண்மணியான பி.ஜீ.யெல்லா.

### பி.ஜீ.யெல்மா – புன்னைக்குடா

"எங்களுடன் தமிழ் மக்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். எங்களது காணிகளுக்கான ஆவணங்கள் சரியான முறையில் கிடைக்கவில்லை. மற்றும் படி பிரச்சினைகள் எதுவுமில்லை" என, புன்னைக்குடா பிரதேசத்தில் சிறிய கடை ஒன்றை அமைத்து வாழ்க்கை நடத்தும் 64 வயதுடைய ஏ.ஆரியவதி கூறினார்.

"இப்போதுள்ள பொருளாதார நெருக்கடிகள் பெரிய பிரச்சினைதான். யுத்தகாலம் என்றாலும், இப்போதானாலும் எம்மிடம் காசு இருந்தால் வாழலாம். எமது கை ஆடினால்தான் வாய் ஆடும். அந்தவகையில் ஜீவிப்பதற்கே பிரச்சினை இருக்கிறது. மற்றும்படி ஒன்றுமில்லை" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

### சிறிய கடையொன்றை நடத்திவரும் ஏ.ஆரியவதி– புன்னைக்குடா

இதேவேளை சிங்கள மக்களின் மீள் வருகை குறித்து 53 வயதுடைய தமிழரான செல்லத்துரை செல்வேஸ்வரன் கூறுகையில், "1984 வன்செயல் காலத்தில் இடம்பெயர்ந்து போய் இப்போது வந்திருக்கிறார்கள். சுனாமி அடித்தபிறகு 2005ல் அவர்கள் எங்களுக்கு விற்ற காணியிலேயே நாங்கள் இருக்கிறோம். 10 பேர்ச் ஒரு லட்சம் ரூபாவுக்கு விற்று நாங்கள் வீடு கட்டியிருக்கிறோம். பிரச்சினையொன்றும் அவர்கள் எங்களுக்குச் செய்யவில்லை. வந்தவர்கள் சிறிய சிறிய கொட்டில்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். மின்சாரம் இல்லை, வசதிகள் இல்லை. பனங்காட்டுக்குள் இருந்து சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்" என்றார்.

நாட்டின் பல பகுதிகளிலும் பல்லினங்களும் இணைந்துவாழும் நிலை இருக்கிறது.சில பகுதிகளில் அவர்கள் தமக்குள்ளான புரிந்துணர்வுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்கிறார்கள். தமிழர்- சிங்களவர்- முஸ்லிம்கள் என்று வேறுபாடு அவர்களுக்குள் இருப்பதில்லை. இது அவர்கள் ஒவ்வொருவரின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் மற்றவர்கள் அறிந்துகொள்ளவும், அவர்களிடைய திருமண பந்தங்களை ஏற்படுத்தவும் ஏதுவாக இருக்கிறது. எனினும் மேலும் சில பகுதிகளில் இன்றும் பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமுள்ளது.

### செல்லத்துரை செல்வேஸ்வரன் – புன்னைக்குடா

1983களுக்குப்பின்னர் உருவான மோசமான சூழ்நிலை காரணமாக வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கின்ற திருகோணமலை மாவட்ட தமிழ்க் கிராமமான தென்னமரவாடி என அழைக்கப்படுகின்ற விவசாயம், கடல் வளம் என நிறைய வளங்களுடன் கூடிய தென்னவன் மரபு வாடி முக்கியமானதாகும். 1984ஆம் ஆண்டு ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக அப்பிரதேசத்தினை விட்டு வெளியேறிய தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசித்து வந்திருந்தனர். 110 குடும்பங்கள் 2010ஆம் ஆண்டு மீளக் குடியேறினர். இப்போது 66 குடும்பங்களே வசிக்கின்றனர். காரணம் தொழில் மற்றும் கல்வி, மருத்துவ வசதிகளின்மையாகும். ஆனால், மீளக் குடியமர்ந்ததன் பின்னர் உருவாக்கியிருக்கின்ற சூழல் அவர்களை மீண்டும் அச்சத்துக்குள் தள்ளியிருப்பதாக உணர்கின்றனர்.

தென்னமரவாடியில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயான 56 வயதுடைய மகாலிங்கம் மங்க஌ஸ்வரி "எமது பிரதேசத்தில் இருக்கிற காணிகளையேனும் காப்பாற்றித் தருவதற்கு யாரேனும் உதவிகள் வழங்க வேண்டும். தொல்லியல் திணைக்களம், மற்றும் பாதுகாப்புத் தரப்பினரது அழுத்தங்கள் மூலம் எமது வயல் காணிகளை அபகரிக்க முனைகிறார்கள்;. அது தொடர்பாக நடைபெற்று வரும் வழக்குகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. நாங்கள் போய்ப் பேச முயன்றால் மீன்பிடிக்கு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், தென்னை மரங்கள் நட்டு நிரந்தரமான குடியிருப்புக்கான வேலைகளில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது" எனக் கருத்துத் தெரிவிக்கிறார்.

தென்னமரவாடி மகாலிங்கம் மங்க஌ஸ்வரி

அதே நேரம், இடம்பெயர்வதற்கு முன்னர் எமது ஊர் சிறப்பாகவே இருந்தது. மீளக் குடியேறிய பின்னர் இங்கு எல்லாம் காடுமண்டிக் காணப்படுகிறது. கல்வி தொழில் என எல்லாவற்றுக்கும் பிரச்சினை இருக்கிறது. எங்களுக்கு இங்கிருப்பதக்கு முடியாமலிருக்கிறது. அதற்குள் உருவாகும் சிங்களவர்கள், முஸ்லிம்களின் வருகையும் நெருக்கடியாகவே இருக்கிறது அத்துமீறிய வருகைகள் காணப்படுகின்றன என்றார்.



பஞ்சாப்


# வாயுக்கசிவால் 11 பேர் உயிரிழப்பு

வாயுக்கசிவால் 11 பேர் உயிரிழந்த சம்பவம் பஞ்சாப் மாநிலம், லூதியானாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

லூதியானாவில் உள்ள பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாயுக்கசிவினால் 11 பேர் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளனர் எனவும் 11 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் குளிர்விக்கும் இயந்திரத்தில் ஏற்பட்ட வாயு கசிவே இவ்விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.




# மெரினா` பேனா கடற்கரை என மாறிவிடும்”

“பேனா நினைவு சின்னம் அமைந்தால், மெரினா என்ற அடையாளம் போய் பேனா கடற்கரை என மாறிவிடும் “என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நீர், மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜெயக்குமார் கூறியதாவது “மெரினா கடற்கரை உலக பிரசித்தி பெற்றது. உலகிலே மிகப்பெரிய நீளமான 2-வது கடற்கரை. மெரினா கடற்கரை ஒரு அடையாள சின்னம். கடலில் பேனா சின்னம் அமைப்பதால் சுற்றுசூழல் பாதிக்கப்படும். மீன்களின் இனப்பெருக்கம் பாதிக்கப்படும். இதற்கு பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். பேனா நினைவு சின்னம் அமைந்தால், மெரினா என்ற அடையாளம் போய் பேனா கடற்கரை என மாறிவிடும்”இவ்வாறு தெரிவித்துள்ளார்.



### இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற பாகிஸ்தான்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே பாகிஸ்தான் வென்றிருந்த நிலையில், ராவல்பின்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, டரைல் மிற்செல்லின் 129 (119), டொம் லேதமின் 98 (85), சட் போவ்ஸின் 51 (51) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 336 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஹரிஸ் றாஃப் 4, நசீம் ஷா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 337 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், பக்கர் ஸமனின் ஆட்டமிழக்காத 180 (144), அஸாமின் 65 (66), மொஹமட் றிஸ்வானின் ஆட்டமிழக்காத 54 (41) ஓட்டங்களோடு 48.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஹென்றி ஷிப்லி, மற் ஹென்றி, இஷ் சோதி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ஸமன் தெரிவானார்.





### இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் மிலன் றோமா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், றோமாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 78 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. இரண்டாமிடத்தில் 61 புள்ளிகளுடன் லேஸியோவும், 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜுவென்டஸும், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஏ.சி மிலனும் காணப்படுகின்றன. இதில் மிலன் ஒரு போட்டியில் அதிகமாக விளையாடியுள்ளது.

# ஐ.பி.எல்: கப்பிட்டல்ஸை வென்ற சண்றைசர்ஸ்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில், டெல்லியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சண்றைசர்ஸ்

சண்றைசர்ஸ்: 197/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அபிஷேக் ஷர்மா 67 (36), ஹென்றிச் கிளாசென் ஆ.இ 53 (27), அப்துல் சமட் 28 (21), அகீல் ஹொஸைன் ஆ.இ 16 (10) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் மார்ஷ் 4/27 [4], அக்ஸர் பட்டேல் 1/29 [4])

கப்பிட்டல்ஸ்: 188/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 63 (39), பில் ஸோல்ட் 59 (35), அக்ஸர் பட்டேல் ஆ.இ 29 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: மாயங்க் மார்க்கண்டே 2/20 [4], தங்கராசு நடராஜன் 1/34 [4], அபிஷேக் ஷர்மா 1/26 [3])

போட்டியின் நாயகன்: மிற்செல் மார்ஷ்



இந்நிலையில் முன்னதாக கொல்கத்தாவில் நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

இதேவேளை, லக்னோவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

பாகிஸ்தான்

# இரு ஆண் குறிகளோடு பிறந்த குழந்தை

## ஆனால் அந்த உறுப்பு இல்லை


இரண்டு ஆண்குறிகளுடன் குழந்தையொன்று பிறந்துள்ளமை பாகிஸ்தானில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இக்குழந்தையின் ஒரு ஆண்குறி மற்றொன்றை விட ஒரு சென்டிமீற்றர் நீளமாக இருப்பதாகவும், இரண்டும் சிறுநீர் கழிக்கக்கூடியதாகவும் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இக் குழந்தைக்கு ஆசன வாய் இல்லை எனக் கூறப்படுகின்றது. இதன் காரணமாக கொலோனோஸ்கோபி மூலம் துளை ஒன்றை உருவாக்க மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘டிஃபாலியா ‘எனப்படும் இவ் அரிய மருத்துவ நிலையானது ஆறு மில்லியன் குழந்தைகளில் ஒருவருக்கே ஏற்படும் எனவும் மருத்துவ வரலாற்றில் இதுவரை 100 கேஸ்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.






அமெரிக்கா

# 66 பேரின் உயிரைக் காப்பாற்றிய சிறுவன்

7 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் சக மாணவர்கள் 66 பேரின் உயிரைக் காப்பாற்றிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

மிச்சிகனில் கடந்த புதன் கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்தன்று 66 மாணவர்களை ஏற்றிக் கொண்டு பாடசாலை பஸ்ஸொன்று சென்றுகொண்டிருந்துள்ளது.

இதன் போது திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்ட சாரதி, உடனடியாகக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் கொடுத்துவிட்டு திடீரென மயக்கமடைந்தார்.

இதனால் அச்சமடைந்த மாணவர்கள் கத்திக் கூச்சலிட்ட நிலையில், சமயோஜிதமாக செயற்பட்ட 7ஆம் வகுப்பு மாணவனான Dillon Reeves பஸ்ஸை நிறுத்தி சக மாணவர்களைக் காப்பாற்றினான்.

இந்நிலையில் குறித்த மாணவனின் செயலை பலரும் பாராட்டி வருகின்றனர்.



# 600 குழந்தைகளுக்கு தந்தையா?

நெதர்லாந்தைச் சேர்ந்தவர் இசைக்கலைஞரான ஜோனாதன் ஜேக்கப்.41 வயதான இவர் கடந்த 2007 ஆம் ஆண்டிலிருந்து தனது விந்தணுக்களை தானம் செய்து வருகிறார்.

இதனை ஒரு சேவையாகத் தொடங்கிய இவருக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. அதன் காரணமாகப் பின் நாளில் இதையே தொழிலாக மாற்றி விட்டார்.

நெதர்லாந்தின் செயற்கை கருத்தரிப்பு சட்ட விதிமுறைகளின் படி, விந்தணு தானம் மூலம் ஒரு நபர் 12 மேற்பட்ட பெண்கள் கருத்தரிப்பிற்கு காரணமாக இருக்கக் கூடாது. அதேசமயம் செயற்கை கருத்தரிப்பின் மூலம் 25க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஒருவர் மட்டுமே தந்தையாக இருக்க அனுமதியும் கிடையாது.

> **“ஒரே தந்தையின் கீழ் பல்வேறு நாடுகளில் பிறந்த உடன்பிறப்புகள் உண்மை தெரியாமல் எதிர்காலத்தில் திருமணப் பந்தத்தில் ஈடுபட்டால் சகோதரத்துவம் பாழாகிவிடும் என்பதற்காகவே இவ்வாறு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது**

எனினும் ஜோனாதன் தனது விவரங்களை வெளிப்படுத்தாமல் வெளிநாடு உட்பட இதுவரை 600 குழந்தைகளின் பிறப்புக்கு இவர் உதவியாக இருந்துள்ளார்.

இவர் மூலமாகக் கருவுற்றுப் பிரசவித்த ஒரு பெண்மணி இந்த தகவலைக் கேட்டு அதிர்ச்சடைந்து இது குறித்து ஜோனாதன் மீது வழங்கு பதிவு செய்துள்ளார்.

500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஒருவர் மட்டுமே தந்தை என்றால் இவர் மூலமாக மரபணுக்களின் பரிமாண வளர்ச்சி உலகின் பல்வேறு நாடுகளில் இருக்க கூடும் என்பதாலும் ஒரே தந்தையின் கீழ் பல்வேறு நாடுகளில் பிறந்த உடன்பிறப்புகள் உண்மை தெரியாமல் எதிர்காலத்தில் திருமணப் பந்தத்தில் ஈடுபட்டால் சகோதரத்துவம் பாழாகிவிடும் என்பதற்காகவே இவ்வாறு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, “இந்த வழக்கு குறித்துத் தீர்ப்பு அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஜோனாதன் ஜேக்கப் யாருக்கும் இனிமேல் விந்தணு தானம் செய்யக்கூடாது. தனது சேவை தொடர்பாக இனிமேல் விளம்பரப்படுத்தவும் கூடாது” என உத்தரவிட்டார்.



சூடான்

# போருக்கு மத்தியில் காரில் பிறந்த குழந்தை

சூடானில் கடந்த சில வாரங்களாக நீடித்து வரும் உள்நாட்டு போரால் மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில், கிழக்கு நைல் மாநிலத்தில் பிரசவ வலியால் துடித்த மனைவியை அவரது கணவர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். வழியில், மருத்துவ சேவையாற்றி வந்த தன்னார்வலர்கள் 3 பேர் காரில் வைத்தே கர்ப்பிணிக்கு பிரசவம் பார்த்தனர்.

இதில் அப்பெண் ஆண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார். குழந்தைக்கு பெயர் சூட்டுமாறு தன்னார்வலர்களைப் பெற்றோர் கேட்டுக் கொண்ட நிலையில் வெற்றியாளன் என்பதை குறிக்கும் விதமாக, முண்டாஸிர் என்று குழந்தைக்கு தன்னார்வலர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

பிரித்தானியா

# மன்னர் 3ம் சார்லஸ்ஸுக்காக கொண்டுவரப்பட்ட கல்

பிரித்தானியாவின் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழாவிற்காக, ஸ்கொட்லாந்தில் இருந்து வரலாற்று சிறப்புமிக்க புனித ஸ்கொட்டிஷ் கல் லண்டனுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

”விதியின் கல் ”என அழைக்கப்படும் இக்கல்லானது பண்டைய ஸ்கொட்லாந்தின் இறையாண்மையின் சின்னமாக பார்க்கப்படுகிறது.

152 கிலோகிராம் எடையுள்ள இந்தக் கல்லை, 1296ம் ஆண்டு அப்போதைய மன்னராக இருந்த முதலாம் எட்வர்ட், ஸ்காட்லாந்திடமிருந்து கைப்பற்றினார்.

மே 6 ஆம் திகதி வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழா நடைபெறவுள்ளதால், எடின்பெர்க் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கல், கடந்த 27 ஆண்டுகளில் முதன்முறையாக அங்கிருந்து லண்டனுக்கு பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்படுகிறது.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 01 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.